நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# குத்துக்கரண அரசியல்வாதிகள்

இருபதாவது திருத்தத்தை அரசு கையில் எடுத்த காலம் தொட்டு அதற்கு தொடர்ந்து நெருக்கடிதான்.

ஒரு புறம் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசுத் தரப்பு பெற்றுக் கொள்ளுமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. தினசரி அதற்கு மாறான செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஆனால், மறுபுறம் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றியே தீருவோம் என்பதில் ஆட்சித் தரப்பு வர வர உறுதியாகக் கருத்து வெளியிட்டு வருகின்றது.

இருபதாவது திருத்தம் தொடர்பாக உயர்நீதிமன்றும் வழங்கிய தீர்ப்பு – தீர்மானம் – இன்னும் உத்தியோகபூர்வமாகப் பகிரங்கப் படுத்தப்படவில்லை – ஊடகங்களில் கசிந்தமையைத் தவிர.

எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது அந்தத் தீர்மானத்தின் விவரத்தை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாக அறிவிக்கும்போதுதான் அது பகிரங்க ஆவணமாகும்.

எனினும், கடந்த வாரம் அந்தத் தீர்மானத்தின் விவரங்களை ஊடகங்கள் வெளியிட்ட போது, உயர் நீதிமன்றத்தின் அந்தத் தீர்மானத்தின் பிரதி அடங்கிய கடித உறை கூட தமது அலுவலகத்தில் உடைக்கப்பட்டிருக்கவில்லை, ஆனால் அது வெளியில் கசிந்து விட்டிருக்கின்றது என்று விசனப்பட்டாரம் சபாநாயகர்.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்களை கூட்டத்துக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்திருக்கின்றார். அது நாளை மறுதினம் நடைபெறுகின்றது.

அப்போது இருபதாவது திருத்தம் தொடர்பில் மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருபதாவது திருத்தத்தில், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்கள் அனுமதியுடன்தான் நிறைவேற்றப்பட முடியும் என்று உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள விடயங்கள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற தீர்மானத்தை ஆளும் தரப்பு இக்கூட்டத்தில் முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த விடயங்கள் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடந்த அரசு விரும்புகின்றதா? இல்லையேல் அச்சரத்துக்களை மாற்றும் புதிய ஏற்பாடுகளை குழு நிலை விவாதத்தின் போது ஆளும் தரப்பு கொண்டு வருமா? இருபதாவது திருத்தத்தின் மீது எப்போது, எத்தனை நாள் விவாதம் நடத்துவது? ஆளும் தரப்புக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் விவாத நேர ஒதுக்கீடு யாது? என்ன விகிதத்தில் அதைப் பிரித்து வழங்குவது? – என்பவை குறித்தெல்லாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சபாநாயகர் தலைமையில் நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

இந்த இருபதாவது திருத்தத்துக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை பௌத்த மத பீடங்கள், கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, ஆளும் கட்சித் தரப்புக்குள் முக்கிய எம்.பிக்கள் என ஒரு சாராரும் எடுத்திருக்கும் அதேசமயம், எதிரணித் தரப்பிலும் எதிர்க் கட்சிகள் வரிசையிலும் சில எம்.பிக்கள் ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு மாறாக ஆளும் தரப்பை ஆதரிக்கக் கூடும் என்ற செய்திகள் கசியத் தொடங்கியிருக்கின்றன.

முக்கியமாக தமிழர் தரப்பில் மூன்று கட்சிக் கூட்டணியில் மலையகத்தைச் சேர்ந்த சில எம்.பிக்கள் அணி மாறி வாக்களிக்கத் தயாராகி வருகின்றார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதேபோன்று – இப்போதைய இருபதாவது அரசமைப்புத் திருத்தம் மாதிரி – நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் இருப்பவருக்குக் கட்டுமட்டில்லா அதிகாரங்களை வழங்கும் விதத்தில் 18ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்ட போது, தேவையான மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு மட்டு மட்டாக அப்போதைய ஆளும் தரப்புக்குக் கிட்டுவதற்கு உதவிய எம்.பிக்களே இவர்கள்.

பின்னர் அதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை பழையபடி வெட்டிக் குறைப்பதற்கு வழி செய்த 19ஆவது திருத்தத்தையும் தாமே முன்னின்று நிறைவேற்றுவதற்கு ஆதரவளித்தார்கள் அவர்கள்.

திரும்பவும் இப்போது, ஜனாதிபதிக்கு கட்டுமட்டில்லாத அதிகாரங்களை வரையறையின்றி வழங்குவதற்கு வழி செய்யும் இருபதாவது திருதத்துக்கும் எதிரணியில் இருந்தபடி குத்துக் கரணம் அடித்து ஆதரவு வழங்குவதற்கு அவர்கள் தயாராகி வருகின்றார்கள்.

இந்தக் ‘காட்டிக் கொடுப்புக்கு’ கிடைக்கக் கூடிய இராஜாங்க அமைச்சர் பதவி என்ற வெகுமானத்துக்காக இத்தகைய அந்தர் பல்டிக்கு அவர்கள் தயாராகி வருகின்றனர்.

ஆளும் தரப்பில் வரக் கூடிய சரிவை எதிர்க்கட்சி வரிசையில் இத்தகைய குத்துக்கரண வீரர்களை வைத்துச் சமாளித்து, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை பெறலாம் என்று எண்ணுகின்றது கோட்டா அரசு. எது, எப்படி என்றாலும் இது கரணம் தப்பினால் மரணம் என்ற அரசியல் சித்து விளையாட்டுத்தான்!

# 21 மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர் நாட்டை முடக்கும் நிலை உருவாகவில்லை

## சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

நாட்டின் 21 மாவட்டங்களில் கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய மக்கள் செயற்படுவார்களாயின் நாட்டில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பதிவாகியுள்ள நோயாளர்களைத் தவிர, கொழும்பு மாவட்டத்தில 160 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 140 பேரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

ஏனைய மாவட்டங்களைப் பொறுத்தவரையில் சில மாவட்டங்களில் ஒருவர் மாத்திரம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

4 மாவட்டங்களில் இவ்வாறு ஒருவர் மாத்திரம் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன், 4 மாவட்டங்களில் இருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள், பிரெண்டிக்ஸ் நிறுவனத்துடன் தொடர்புடையவர்கள் என கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நாட்டை முடக்கும் நிலை உருவாகவில்லை என சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹற்றனில் மண்சரிவு இருவர் படுகாயம்!



ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் நகரில் எம்.ஆர்.டவுன் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எதிர்ப்பக்கத்தில் ஏற்பட்ட மண் சரிவில் இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) அதிகாலை நான்கு மணியளவில் ஏற்பட்டுள்ளதுடன் அங்கிருந்த இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடைகளுக்குப் பின்புறமாக இருந்த பாரிய மண்திட்டே இவ்வாறு சரிந்துள்ளது.

மேலும், இந்த மண்திட்டு தொடர்ந்து சரியக்கூடிய அபாயம் காணப்படுகின்றமையால் அப்பகுதியில் உள்ள ஒரு குடும்பத்தினர் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை கரோலினா பகுதியில் கித்துல் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்து இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நான்கு மணியளிவில் இடம்பெற்றுள்ளதுடன், விபத்தில் ஒரு வீடு முற்றாகவும், மற்றைய வீடு பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெறும் போது ஒரு வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக்கொண்டிருந்தனர் எனவும் எனினும் தெய்வதீனமாக எவருக்கும் காயமேற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் பகுதிகளில் சீரற்ற காலநிலை நிலவுகின்றமையால் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# கொழும்பில் 2884 பேருக்கு பி.சி.ஆர். சோதனை 10 பேருக்குக் கொரோனா தொற்று அடையாளம்

கொழும்பு, ஒக்.14

கடந்த 6 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பில் இரண்டாயிரத்து 884 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்தியர் ருவன் விஜேமுனி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்களுள் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவர்களில் ஐந்து பேர் மாத்திரமே கொழும்பு நகரை சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்கள் இதொடர்பாக அச்சப்படாமல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கடற்றொழிலில் ஈடுபடவேண்டாம் மீனவர்களுக்கு அறிவுறுத்தல்!

கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் நாளை (வியாழக்கிழமை) காலை வரை இவ்வாறு கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன், கடல் கொந்தளிப்பாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பிராந்தியங்களில் மணித்தியாலததுக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை காற்று வீசக்கூடும் என அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# 69 பிக்குகள் உள்ளிட்ட 89 பேர் தனிமையில்!

*கஹபொல, ஒக்.14*

*கஹபொல - சிலுமின பிரிவெனாவில் உள்ள 69 பிக்குகள் உள்ளிட்ட 89 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*குறித்த பிரிவெனாவில் உள்ள பிக்கு ஒருவரை பார்வையிட வந்து சென்ற பிக்குவின் தாய், கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.*

*இதன்காரணமாகவே குறித்த பிரிவெனாவின் பிக்குகள் உள்ளிட்டவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என பிலியந்தல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார் மெகபூபா!



ஜம்மு – காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும் மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவருமான மெகபூபா முப்தி ஓராண்டுக்குப் பின் வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்த்து இரத்து செய்யப்பட்டத்தைத் தொடர்ந்து காஷ்மீர் மாநிலத்தில் முக்கிய கட்சிகளாக இருந்துவரும் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவரான பரூக் அப்துல்லா மற்றும் அவரது மகனும் முன்னாள் முதல்வருமான ஓமர் அப்துல்லா, மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் மெகபூபா முப்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். முதலில் சிறைசாலைகளிலும் பின்னர் வீட்டுக் காவலிலும் அவர்கள் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களை விடுவிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தேசிய மாநாட்டுகட்சிதலைவரான பரூக் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டார்.

இருப்பினும் மெகபூபா முப்தியை விடுவிப்பதில் இழுபறி நிலை காணப்பட்டது. அத்துடன் இது தொடர்பாக வழக்கும் உச்சநீதிமன்றத்தில் பதியப்பட்டிருந்தது.

அந்த வழக்கை விசாரணை செய்த உச்சநீதிமன்றம், இன்னும் எத்தனை நாள்கள் முப்தி வீட்டுச் சிறையில் இருக்க வேண்டும் என்பது தொடர்பாக 2 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும் என ஜம்மு – கா ஷ்மீர் நிர்வாகத்திற்கு உத்தரவிட்டிருந்தது.

அந்த கெடு முடிவடைய உள்ள நிலையில் மெகபூபா முப்தி வீட்டு காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என காஷ்மீர் மாநில நிர்வாகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார நடைமுறைகளை மக்கள் பின்பற்றவேண்டும்!

### மத்திய அரசு வலியுறுத்து

பண்டிகை மற்றும் குளிர் காலங்களில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரிக்கும் என்பதால் மக்கள் சுகாதார கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள மத்திய அமைச்சரவை குழுவின் 21 ஆவது ஆலோசனை கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ வர்தன் கருத்து தெரிவிக்கை யில் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

இதன்பொது தொடர்ந்து தெரிவித்த அவர்– கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் மத்திய அரசு தன் உறுதியான நடவடிக்கைகளால் நோயின் தாக்கத்தைக் குறைத்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தோர் சதவீதம் 86.88 ஆக அதிகரித்து உள்ளது. உலகிலேயே நம் நாட்டில் தான் கொரோனா விலிருந்து குணமடைந்தோர் சதவீதம் அதிகமாக உள்ளது. இந்தியாவில் கொரோனாவுக்கு பலி யானவர்களின் சதவீதம் 1.53 ஆக உள்ளது.

தினமும் 15 லட்சத்துக்கும் அதிகமானோரிடம் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. ஆனாலும் கொரோனா பரவல் தொடர்கிறது. பண்டிகை காலம் ஆரம்பிக்கவுள்ளது. அதையடுத்து குளிர்காலம் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த காலங்களில் வைரஸ் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மருத்துவத்துறையினர் எச்சரித்துள்ளனர். அதனால் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் அலட்சியம் காட்டுவது என்ற பேச்சுக்கே இடம் அளிக்க கூடாது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும். – என வலியுறுத்தியுள்ளார்.

## ஐதராபாத்தில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 10 பேர் உயிரிழப்பு!



ஐதராபாத்தில் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடும் மழை காரணமாக ஐதராபாத் ஓல்டு சிட்டி பகுதியில் சுவர் ஒன்று இடிந்து விழுந்துள்ளது. இதனால் அந்த சுவரை ஒட்டியிருந்து 10 வீடுகள் இடிந்து விழுந்து சேதமடைந்துள்ளன. இதில் இரண்டு வீடுகள் முற்றாக சேதம் அடைந்துள்ளன.

இதொடர்பாக மீட்புப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த இடத்திற்கு சென்ற மீட்பு படையினர் தங்களுடைய பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனையடுத்து இன்று (புதன்கிழமை) காலை நிலைவரப்படி 10 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமையுடன், காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 72 லட்சத்தைக் கடந்த கொரோனா தொற்றாளர்!

இந்தியாவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒரேநாளில் 63 ஆயிரத்து 517 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இதனையடுத்து தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 72 லட்சத்து 37 ஆயிரத்தை கடந்துள்ளது.

அத்துடன் 723 பேர் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழந்தவர்களின்மொத்தஎண்ணிக்கை ஒரு லட்சத்து 10 ஆயிரத்தை கடந்துள்ளது. மேலும் 62 லட்சத்து 98 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

8 லட்சத்து 27 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்து சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இவர்களில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்டோரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் தொடர்பாக ஆராய அனைத்துக் கட்சி கூட்டம்!



வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணி மற்றும் தேர்தல் தொடர்பாகப்பல்வேறு விடயங்கள் பற்றி ஆலோசிப்பதற்காக தமிழ் நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் எதிர் வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள தாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கான சிறப்பு சுருக்க முறைதிருத்தப்பணியை மேற்கொள்ள மாநில தலைமை தேர்தல் அதிகாரிக்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பாக நடவடிக்கைகளில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு இறங்கியுள்ளார். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வாக்காளர் பட்டியல்தயாரிப்புதொடர்பான சிறப்பு சுருக்கமுறை திருத்தப் பணிகள் தொடர்பாக ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பது, இறந்தவர் பெயர் நீக்காமல் இருப்பது உட்பட சில குற்றச்சாட்டுகளை தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் ஏற்கனவே கூறி வருகின்ற நிலையில் இது தொடர்பாகஇந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## ஆந்திர முதலமைச்சர் மீது வழக்குத் தாக்கல்!



ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி மீது உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டுகளை கூறிய விவகாரத்தில் விளக்கம் கோரியே மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமனுவில், நீதித்துறைக்கு எதிராக இதுபோல பொதுவெளியில் குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்கு ஜெகன்மோகன் ரெட்டிக்கு தடை விதிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதி என்.வி. ரமணா, தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுவுக்கு சாதகமாக ஆந்திர உயர்நீதிமன்ற செயல்பாடுகளில் தலையிடுவதாக முறைப்பாடு கூறி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு ஆந்திர முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏழாவது சுற்றுப் பேச்சுகள் ஆக்கபூர்வமாக அமைந்தன!

### இந்தியா - சீனா கூட்டறிக்கை



இரு நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கு இடையே நடந்த ஏழாவது சுற்றுப் பேச்சு ஆக்கபூர்வமாக இருந்ததாக இந்தியா – சீனா நாடுகள் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய – சீன எல்லையில் லடாக் பகுதியில் இரு நாடுகளுக்கு இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. பிரச்சினைக்கு தீர்வு காண இரு நாட்டு இராணுவ அதிகாரிகளிடையே ஆறு சுற்றுப் பேச்சுகள் ஏற்கனவே நடந்து முடிந்தன. எனினும் இந்தப் பேச்சுகளில் ஒருமித்த கருத்துக்கள் எட்டப்படவில்லை.

இந்த நிலையில், இந்திய சீன இராணுவ கொமாண்டர்கள் இடையே நடந்த ஏழாவது சுற்று பேச்சுகளுக்குப் பின்னர் இந்தியாமற்றும்சீனாஆகியன இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில், எல்லையில் இருந்து படைகளை விலக்கிக்கொள்வது தொடர்பாக நடந்த ஏழாவது சுற்று பேச்சு நம்பிக்கை அளிப்பதாகவும், ஆக்கப்பூர்வமாகவும் பரஸ்பரம் புரிந்துகொள்ளும் வகையிலும் அமைந்ததாகத் தெரிவித்துள்ளன.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடு பிரச்சினையாக மாறக்கூடாது என்ற இரு நாட்டு தலைவர்களின் விருப்பத்தை முழுமையாகவும், விரைவாகவும் செயற்படுத்த இந்தப் பேச்சில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளன.

அதேநேரம் எல்லையில் இருந்து படைகளை மிக விரைவில் திரும்பப் பெறுவது தொடர்பாக பரஸ்பரம் இராணுவம் மற்றும் தூதரக உறவு மூலம் பேச்சு நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது கொரோனா தடுப்புக்கான தீர்வு ஆகாது!

கொரோனா வைரஸைத் தடுக்க நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது மட்டுமே தீர்வாகாது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸின் தாக்கம் 216 நாடுகளில் பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவிலிருந்து உலகைக் காப்பாற்ற கொரோனா தடுப்பூசி கண்டு பிடிக்கும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையிலான மருந்துகளைத் தயாரிக்கும் பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்த கொடிய வைரஸை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதன் மூலம் மட்டுமே அழிக்கமுடியும் என பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.




இந்த நிலையில், கொரோனா வைரஸைத் தடுக்க நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது மட்டுமே தீர்வாகாது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனாம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தடுப்பூசிகள் மூலம் வைரஸை கட்டுப் படுத்திவிடலாம் என்று நினைக்கின்றனர்.

கொரோனா வைரஸை பொதுமக்களிடம் பரவவிட்டு அதன் மூலம் மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து இந்த பெருந்தொற்றை தடுத்து விடலாம் என சில விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். மேலும், இதுதான் கொரோனாவை தடுத்து நிறுத்த ஒரே வழி என்றும் கருதுகின்றனர்.

ஆனால் கொரோனாவைக் கட்டப்படுத்த நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது மட்டுமே தீர்வாகாது என அவர் தெரிவித்துள்ளார்.

வைரஸ் பாதிப்பில் இருந்து பாதுகாத்துக்கொள்வதே நோய் எதிர்ப்பு சக்தி என்பதே தவிர வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாவது அல்ல எனத் தெரிவித்துள்ள அவர், ஒரு பெருந்தொற்றை நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டு கட்டுப்படுத்துவது என்பது வரலாற்றில் இல்லாத ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்கள் எவ்வாறு மீண்டும் வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகுகின்றனர் என்பது தொடர்பாக சிறு சிறு தகவல்கள் மட்டுமே தங்களிடம் உள்ளன எனத் தெரிவித்துள்ள டெட்ரோஸ், அதன் முழுமையான விவரங்கள் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் நாம் இதுவரை முழுமையாக புரிந்துகொள்ளாத ஒரு கொடிய வைரஸை சுதந்திரமாக பரவ விடுவது நெறிமுறையற்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய நாடுகளில் கொரோனா அதிகரிப்பு

ஐரோப்பிய நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, ஸ்பெயினில் 9 லட்சத்து 25 ஆயிரத்து 341 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 07 ஆயிரத்து 118 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமையோடு, 80 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேபோன்று பிரானஸில் 7 லட்சத்து 56 ஆயிரத்து 472 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 12 ஆயிரத்து 993 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமையோடு, 117 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, ஜேர்மனியில் 3 லட்சத்து 35 ஆயிரத்து 679 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 04 ஆயிரத்து 585 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமையோடு, 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஆர்ஜென்டினா கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை 9 லட்சத்தைக் கடந்தது!



ஆர்ஜென்டினாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 லட்சத்தைக் கடந்துள்ளது.

ஆர்ஜென்டினாவில் கடந்த 24 மணி நேரத்தில் 13 ஆயிரத்து 305 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 9 லட்சத்து 17 ஆயிரத்து 35 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மட்டும் 386 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 24 ஆயிரத்து 572 ஆக அதிகரித்துள்ளது.

7 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

## நோர்வேயின் குற்றச்சாட்டுக்கு ரஷ்யா மறுப்புத் தெரிவிப்பு!

சைபர் தாக்குதல் தொடர்பாக நோர்வேயால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ரஷ்ய அரசாங்கம் மறுத்துள்ளது.

நோர்வே நாடாளுமன்றத்தின் மின்னஞ்சல் கட்டமைப்பின் மீது கடந்த ஓகஸ்ட் மாதம் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

நாட்டின் முக்கிய ஜனநாயக பீடத்தின் மீது நடத்தப்பட்ட இத்தகைய தாக்குதலானது மிகவும் ஆபத்தானது என நோர்வே வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா உள்ளமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனவும் நோர்வே வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும் நோர்வேயால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது.

## இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் இன்று முக்கிய பேச்சு



இஸ்ரேலுக்கும், லெபனானுக்கும் இடையிலான முக்கிய பேச்சு இன்று (புதன்கிழமை) ஆரம்பமாகியது.

இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாக தொடரும் கடல் எல்லைப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் இந்த பேச்சு ஆரம்பமாகியுள்ளது.

பேச்சானது அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையின் கீழ் லெபனான் தெற்கு எல்லை நகரமான நாகியரேவில் இடம்பெறுகின்றது.

## புதிய ஐ போன் 12 அறிமுகமாகியுள்ளது!



அப்பிள் நிறுவனம் தனது புதிய ஐ போன் வரிசையை அறிமுகம் செய்துள்ளது.

கலிபோர்னியாவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற மெய்நிகர் நிகழ்வின் போது புதிய ஐ போன் 12 அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, ஐ போன் 12 மினி, ஐ போன் 12, ஐ போன் 12 புறோ மற்றும் ஐ போன் 12 புறோ மக்ஸ் ஆகிய 4 புதிய திறன்பேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த அனைத்து திறன்பேசிகளும் 5 ஜி வலையமைப்பை அனுகுவதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என, அப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஒரு லட்சத்து 85 ஆயிரம் தாண்டியது கனடாவில் கொரோனா பாதித்தவர்கள்

கனடாவில் கொரோனா வைரஸ் தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, கனடாவில் ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 881 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் நான்காயிரத்து 42 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமையோடு, 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

கனடாவில், இதுவரை மொத்தமாக 9 ஆயிரத்து 654 பேர் உயிரிழந்துள்ளனர்.

## லண்டனில் கொரோனா தொற்றாளர் அதிகரிப்பு!

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, பிரித்தானியாவில் 6 லட்சத்து 34 ஆயிரத்து 920 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் 17 ஆயிரத்து 234 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமையோடு, 143 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரித்தானியாவில், இதுவரை மொத்தமாக 43 ஆயிரத்து 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

# தலிபான் மீது அமெரிக்கா விமானத் தாக்குதல்கள்!



ஆப்கானிஸ்தானின் ஹெல்மந்த் மாகாணத்தில் தலிபான்களின் நிலைகள் மீது அமெரிக்கா விமானத் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஆப்கானுக்கான அமெரிக்க இராணுவ செய்தித் தொடர்பாளர் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

அமெரிக்காவுடன் மேற்கொண்டுள்ள அமைதி ஒப்பந்தத்துக்கு எதிராக, ஹெல்மந்த் மாகாணத்தில் தலிபான்கள் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதனைத் தடுக்கும் வகையிலேயே அவர்களது நிலைகள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் ஆப்கான் அமைதி ஒப்பந்தத்துக்கு எதிரானது அல்ல. தலிபான்களின் தாக்குதல்களிலிருந்து ஆப்கான் பாதுகாப்புப் படையினரை அமெரிக்கா தொடர்ந்து பாதுகாக்கும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

